சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No.114 / 2013

பெயர்: லக்ஷ்மி வா.சா.2 தேதி **10.10.2025**

முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இல்லை, பொதுவில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதிக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் இவ்வழக்கு நடைபெறுவது தொடர்பாக சம்மன் வந்ததா என்றால் வந்தது. வழக்குச்சொத்துக்கள் அனைத்தும் கருப்பநாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்து. எனது கணவரின் பெயர் வீரமுத்து. எனது கணவர் வீரமுத்து என்பவர் கருப்பாநாயக்கருக்கும், பெரியக்காளுக்கும் பிறந்த மகன். நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் நான்காம் பிரதிவாதி என் மகன். நான் இவ்வழக்கில் மூன்றாம் பிரதிவாதியாக இருப்பதால் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். பாப்பாத்தியம்மாளிடமிருந்து முத்தம்மாள் 40 வருடங்களுக்கு முன்பு கிரையம் வாங்கினார். பிச்சம்பட்டியில் உள்ள கருப்பநாயக்கருக்கு சொந்தமான வீட்டு சொத்தினை எங்களுக்கு பாகம் ஒதுக்கி கொடுத்துள்ளார்கள். எனது மாமனார் கருப்பாநாயக்கர் இறந்தவுடன் ஊர் பைசல்படி பாகம் பிரித்துக்கொண்டதில் பிச்சம்பட்டியில் உள்ள வீடு எங்களுக்கு ஒதுக்கப்பட்டது. அப்போதே பிச்சம்பட்டியில் உள்ள நிலங்களையும் பாகம் பிரித்துக்கொண்டார்கள். என் மாமனார் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது மாமனார் இறந்தஉடனேயே சொத்துக்கள் அனைத்தும் பாகம் பிரித்துக்கொண்டு தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதை மறைத்து நான் வாதிகளுக்கு ஆதரவாக பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்று கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம் /- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.